

திருப்பூர் மாவட்டம், கன்னிவாடி பேரூராட்சி, காதக்கோட்டையில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் அமைக்கப்பட்ட நிழற்குடையினை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன், மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் திறந்து வைத்தனர். இதில் தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் ஃபெலிக்ஸ்ராஜா, திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், ஒன்றிய செயலாளர்கள் ப.பழனிசாமி துரை தமிழரசு, கன்னிவாடி பேரூர் செயலாளர் சுரேஷ், பேரூராட்சி தலைவர் ரேவதி சுரேஷ் உள்பட மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், இந்நாள், முன்னாள் மக்கள் பிரதிநிதிகள், கழக உடன் பிறப்புகள் பலர் கலந்து கொண்டனர்.

### அரியலூர் மாவட்டத்தில் ‘மக்களுடன் முதல்வர்’ மூன்றாம் கட்ட சிறப்பு முகாம்!

# ரூ.8.49 கோடி மதிப்பில் 2,113 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர் சி.வி.கணேசன் வழங்கி – பேச்சு!

அரியலூர், ஜூன் 21-

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன் அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதி, தா.பழூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட தா.பழூர் ஊராட்சி மற்றும் ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட தழுதாழைமேடு, குண்டவெளி, இளையபெருமாள் நல்லூர், குருவாலப்பர் கோவில் ஆகிய ஊராட்சிகளில் ஊராட்சிகளுக்கான மூன்றாம் கட்ட மக்களுடன் முதல்வர் சிறப்பு முகாமினை தொடங்கி வைத்து, 2,113 பயனாளிகளுக்கு ரூ.8.49 கோடி மதிப்பிலான பல்வேறு அரசுத் துறைகளின் சார்பில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்

இந்நிகழ்ச்சிகள் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, தலைமையில், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் முன்னிலையில் நடைபெற்றது.

மக்களுடன் முதல்வர் மூன்றாம் கட்ட முகாமினை தொடங்கி வைத்து தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வெ.கணேசன் பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின் படி, அரியலூர் மாவட்டத்தில் உள்ள கடைகோடி மக்களுக்கும் அரசின் திட்டங்கள் அனைத்தும் சென்றுசேர வேண்டும் என்ற நோக்கத்தில் இத்தகைய மக்களுடன் முதல்வர் முகாம்கள் நடைபெறுகிறது. அரசின் அனைத்து துறை அலுவலர்களும் மக்களை தேடி சென்று அவர்களின் குறைகளை கேட்டறிந்து, மனுக்களை பெறுவதுடன் நலத்திட்ட உதவிகளையும் வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டதன் அடிப்படையில் இம்முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. வருவாய் துறையின் வட்டாட்சியர் அலுவலகம் வாயிலாக மூலம் வழங்கப்படும் முதியோர் உதவித்தொகைள், பட்டா மாறுதல், விதவை சான்று, நிள அளவை மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான மூன்று சக்கர வண்டிகள் உள்ளிட்ட பல்வேறு சேவைகள் தொடர்பான மனுக்களை பெற்று அந்த மனுக்களின் மீது 30 நாட்களுக்குள் தீர்வு காணப்படவுள்ளது.

**தமிழ்நாடு அரசின் நிதி உதவி!**

ஆதிதிராவிடர் நலத்துறையின் சார்பில் ஆதிதிராவிடர் மாணவர்கள் உயர் கல்வி பெறுவதற்கான மானிய உதவித்தொகைகள், அயற்நாட்டில் கல்வி பயில்வதற்கு ரூ.35 இலட்சம் வரையில் கல்வி உதவித்தொகைள், தாட்கோ நிறுவனத்தின் வாயிலாக பல்வேறு மானிய உதவித் தொகைகள், படித்த இளைஞர்களுக்கு அம்பேத்கர் தொழில் முனைவோர் திட்டத்தின் கீழ் கடனுதவிகள் வழங்கப்படுகிறது. இத்திட்டங்களில் பயன்பெற விரும்புவோர்கள் மனுக்கள் அளித்து பயன்பெறலாம். மேலும் நிலம் இல்லாத ஆதிதிராவிடர் மக்கள் நிலம் வாங்குவதற்கு ரூ.5 இலட்சம் நிதியுதவி தமிழ்நாடு அரசால் வழங்கப்படுகிறது. வேளாண்மைத் துறையின் சார்பில், மானியத்தில் விதைகள், உரங்கள், பவர் டில்லர்கள், சொட்டு நீர் பாசனத்திற்கான உபகரணங்கள், டிராக்டர்கள், தார்பாய்கள் உள்ளிட்டவைகள் வழங்கப்படுகிறது. அனைத்து தரப்பு மக்களுக்கும் அரசின் நலத்திட்டங்கள் சென்று சேர வேண்டும் என்ற நோக்கத்தில் இத்தகைய முகாம்கள் நடத்தப்படுகிறது.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் பல்வேறு சிகிச்சைகள் மற்றும் மூட்டுமாற்று அறுவை சிகிச்சை உள்ளிட்ட பல்வேறு அறுவை சிகிச்சைகள் மேற்கொள்வதற்கான முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு அட்டைகள் அரசால் வழங்கப்படுகிறது. இதனை பொதுமக்கள் பெற்று பயன் பெறவேண்டும். தொழிலாளர் நலன் துறை சார்பில் கல்வி உதவித்தொகைள், ஓய்வூதியங்கள், திருமண உதவித்தொகைககள் வழங்கப்படுவதுடன், மகப்பேறு நிதியுதவி, தொழிலாளர்களுக்கான விபத்து உதவித் தொகை தற்போது ரூ.5 இலட்சத்திலிருந்து ரூ.8 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், அத்தொகையானது 48 மணி நேரத்திற்குள் வழங்கப்படுகிறது.

**‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்டம்!**

தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு சட்டமன்ற தொகுதியிலும் சுமார் 52,000 குடும்பங்களுக்கு மாதந்தோறும் ரூ.1,000 கிடைக்கப்பெற்று பயன் பெற்று வருகின்றனர். உயர் கல்வி பயிலும் பெண் பிள்ளைகளுக்கு புதுமைப்பெண் திட்டத்தின் மூலமாகவும், ஆண் பிள்ளைகளுக்கு தமிழ்ப்புதல்வன் திட்டத்தின் மூலமாகவும் மாதம் ரூ.1000 உதவித்தொகையினை தமிழ்நாடு அரசு வழங்குகிறது. மேலும், ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதிகுட்பட்ட மாணவ, மாணவிகள் தொழிற்கல்வி பயிலும் வகையில் தா.பழூர் ஊராட்சியில் புதியதாக அரசினர் தொழிற்பயிற்சி மையம் உருவாக்கப்பட்டு இந்த ஆண்டே செயல்பாட்டிற்கு வர உள்ளது. கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தின் வாயிலாக மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1000 வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் விடுபட்டுள்ள தகுதியுள்ள அனைவருக்கும் உரிமைத்தொகை வழங்கப்படும். மக்களைத் தேடி வந்து குறைகளை கேட்கின்ற அரசாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான அரசு உள்ளது. மேலும், தமிழ்நாடு முழுவதும் ஜூலை 15 அன்று தொடங்கி அக்டோபர் மாதம் வரை உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் 10,000 முகாம்கள் நடைபெறவுள்ளது.

இவ்வாறு அமைச்சர் சி.வி.கணேசன் பேசினார்.

இன்றையதினம் தா.பழூர் ஊராட்சி ஒன்றியம், தா.பழூர் ஊராட்சி எஸ்.கே.பி.மஹாலில் நடைபெற்ற முகாமில் 463 பயனாளிகளுக்கு ரூ.4,04,83,050 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும், ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியம், தழுதாழைமேடு, ஊராட்சி, கிருஷ்ணா மஹாலில் நடைபெற்ற முகாமில் 405 பயனாளிகளுக்கு ரூ.42,25,382 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும், குண்டவெளி ஊராட்சி, குண்டவெளி கட்டட குழு திருமண மஹாலில் நடைபெற்ற முகாமில் 401 பயனாளிகளுக்கு ரூ.1,82,15,783 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும், இளையபெருமாள் நல்லூர் ஊராட்சி மன்ற அலுவலகலம் அருகில் நடைபெற்ற முகாமில் 408 பயனாளிகளுக்கு ரூ.77,82,891 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும், குருவாலப்பர் கோவில் ஊராட்சி, மீரா திருமண மஹாலில் நடைபெற்ற முகாமில் 436 பயனாளிகளுக்கு ரூ.1,41,64,919 என மொத்தம் 2,113 பயனாளிகளுக்கு பட்டா மாற்றம் ஆணைகள், கலைஞரின் கனவு இல்லம் பணிக்கான ஆணைகள், சக்கர நாற்காலி, காதொலி கருவி, மாற்றுத்திறனாளிகள் அடையாள அட்டை, கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை திரவ பெட்ரோலிய எரிவாயு தேய்ப்பு பெட்டி, கால் நடை பராமரிப்பு கடன், பழச்செடிகள் தொகுப்பு, ஊட்டச்சத்து பெட்டகம், மருத்துவக் காப்பீட்டு அட்டைகள், புதிய மின் இணைப்பு கூடுதல் மின் பளு, பயிர் கடன், உயிர் உரங்கள், கறவை மாட்டுக் கடனுதவி, சமுதாய தொழில் முனைவோர் நிதி, மின்மோட்டர் பொருத்தப்பட்ட தையல் இயந்திரம், பவர் டில்லர் என பல்வேறு அரசுத் துறைத் திட்டங்களின் கீழ் ரூ.8,48,72,025 மதிப்பிலான பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட வருவாய் அலுவலர் க.ரா.மல்லிகா, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் முனைவர்.ஆ.ரா.சிவராமன், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் திட்ட இயக்குநர் ரவிச்சந்திரன், உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் ஷீஜா, மாவட்ட நிலை அலுவலர்கள், அரசு அலுவலர்கள், பயனாளிகள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



கோவை தெற்கு மாவட்டம், கவுண்டம்பாளையம் தொகுதி, பெரியநாயக்கன் பாளையம் கிழக்கு ஒன்றியத்துக்குட்பட்ட பாலமலை பகுதிகளில் வாழும் மலைவாழ் மக்கள் மற்றும் பழங்குடியின மக்களின் பல வருட தொடர் கோரிக்கையினை நிறைவேற்றும் வகையில் ரூ. 8.76 கோடி மதிப்பீட்டில் “தார்ச் சாலை” அமைக்கும் பணியினை கோவை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப.ராஜ்குமார், வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி துவக்கி வைத்தனர். இதில் பெரியநாயக்கன்பாளையம் கிழக்கு ஒன்றியச் செயலாளர் கார்த்திக், மாவட்ட துணைச் செயலாளர் அசோக்பாபு ஆறுக்குட்டி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி.பி.சுப்பிரமணியன், சர்க்கார் சாமகுளம் ஒன்றிய செயலாளர் எஸ்.பி.சுரேஷ்குமார், விக்னேஷ்பாபு, பழனிசாமி, கலா சாந்தாராம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.





நாமக்கல் மேற்கு மாவட்ட திமுக தளபதியார் அரங்கம் மற்றும் அலுவலகம் திறப்பு விழாவில் முன்னாள் அமைச்சரும், மேற்கு மண்டல பொறுப்பாளருமான வி.செந்தில் பாலாஜி கலந்துகொண்டு அலுவலகத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன், நாமக்கல் மேற்கு மாவட்ட கழகப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி, நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், நாமக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் ஈ.ஆர்.ஈஸ்வரன், நாமக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் வி எஸ் மாதேஸ்வரன், மற்றும் தொகுதி பொறுப்பாளர்கள், ஒன்றிய , நகர, பேரூர் கழக செயலாளர், சார்பு அணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் கழகத் தொண்டர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### அமைச்சர்கள் கோவி.செழியன் – சிவ.வீ.மெய்யநாதன் நலத்திட்ட உதவிகள் வழங்கினர்!

# செம்பனார்கோயிலில் ‘மக்களுடன் முதல்வர்’ திட்ட முகாம்!

## நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ.-எம்.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

மயிலாடுதுறை,ஜூன் 21-

மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் வடக்கு ஒன்றியம் கொண்டத்தூர், பாடசாலை ஆகிய கிராமங்களில் ஊரக பகுதிகளுக் கான மூன்றாம் ஈட்ட மக்களுடன் முதல்வர் திட்ட முகாமிளை உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன், பிற்படுத்தப் பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ வீ.மெய்யநாதன் ஆகியோர் தொடங்கி வைத்து, பார்வையிட்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் வடக்கு ஒன்றியம் கொண்டத்தூர், பாடசாலை

ஆகிய கிராமங்களில் ஊரக பகுதிகளுக்கான மூன்றாம் கட்ட மக்களுடன் முதல்வர் திட்ட முகாமிற்கு மாலட்ட வருவாய் அலுவலர் உமா மகேஸ்வரி தலைமை தாங்கினார்.

மயிலாடுதுறை மாவட்டக் கழக செய லாளகும். பூம்புகார் சட்டமன்ற உறுப்பிளகுமான நிவேதா எம். முருகள், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ராஜகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

செம்பனார்கோயில் வடக்கு ஒன்றியம் கொண்டத்தூர், பாடசாலை ஆகிய கிராமங்களில் ஊளர் பகுதிகளுக்கான மூன்றாம் கட்ட மக்களுடன் முதல்வர் திட்ட முகாமை உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி செழியன், பிற்படுத்தப் பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் தொடங்கி வைத்து பார்வையிட்டு பயனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார்கள்.

மக்களிடம் முதல்வர் திட்ட முகாமில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேசுகையில் தமிழ் மொழியை பாதுகாக்க கூடிய முக்கிய காலகட்டத்தில் நாம் இருக்கிறோம்.1938 இல் தொடங்கிய இந்த மொழிப்போர் இன்னும் நீடித்து கொண்டு தான் இருக்கிறதுதமிழ்நாடு முதலமைச்சர் தளபதி தான் இன்று தாய் மொழி தமிழை செம்மொழித் தமிழை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் பாதுகாத்த தமிழை நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் பாதுகாத்து வருகிறார்.ஒன்றிய அரசாங்கம் நம்முடைய பிள்ளைகளுக்கு கொடுக்க வேண்டிய ரூ 2150 கோடி ரூபாயை கிட்ட கிட்டத் தட்ட 43 லட்சம் மாணவ மாணவிகள் பயன்பெறக்கூடிய நம் வரிப்பணத்தில் நமக்கு வழங்க வேண்டிய மும்மொழி கொள்கையை ஏற்றுக் கொண்டால் தான் ,புதிய கல்விக் கொள்கையை ஏற்றுக் கொண்டால் தான்

அந்தத் தொகையை வழங்கப்படும் என்று ஆட்சி நடத்தக்கூடிய ஒன்றிய அரசாக உள்ளது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் நமது தாய் மொழி தமிழை தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள்தான் காத்திருக்கிறார். தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையில் திராவிட மாடல் ஆட்சியில்

4 ஆண்டுகளுக்கு மேலாக பல பணிகளை, திட்டங்களை சிறப்பாக . நிறைவேற்றி நடைபெற்றுள்ளது. நமது மயிலாடுதுறை மாவட்டத்திற்கு பல்வேறு சிறப்பும், பெருமை யும் உள்ளது. . குக்கிராம மக்களுக்கு தேவையான வசதிகளான, அதற்கான தீர்வுகளாக, கலைஞரின் கனவு இல்லம், 2001 க்கு முன்பு கட்டப்பட்ட வீடுகளின்; மராமத்து பணிக்கான திட்டத்தை தந்தவர். ரூ.2 இலட்சத்து 40 ஆயிரம் மதிப்பில் புதிதாக வீடு வழங்கும் திட்டத்தை தந்தவர் நம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். மக்களுக்காக சேவைகளை வழங்கி வருபவர். இந்த முகாமில் பெறப்படும் மனுக்களுக்கு விரைவில் 30 நாட்களுக்குள் தீர்வு காணப்படும். நடைபெற்ற 16ம் தேதி நடைபெற்ற அரசு விழாவில், அனைத்து மாவட்டங்களிலும் துணை முதலமைச்சர் அவர்கள் மகளிர் சுய உதவிக்குழு சுழல் நிதி கடனுதவிகளை வழங்கினார்கள். நமது மயிலாடுதுறை மாவட்டத்தில் 836 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.54 கோடி மதிப்பில் கடனுதவிகள் வழங்கப்பட்டன. மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கான விளை யாட்டுப் போட்டிகளையும் நடத்தி, அவர்களுக்கு பரிசுகளும் வழங்கியவர் நம் துணை முதலமைச்சர் அவர்கள். உலகத்தில் இருக்கக்கூடிய பல்வேறு தொழிற்சாலைகள் தமிழ்நாட்டில் தொழில் தொடங்கி, உள்நாட்டு உற்பத்தி 9.69 சதவீதம் அதிகமான பொருளாதாரத்தை பெற்று தந்தவர் நம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். பெண்களுக்கான திட்டங்கள், உயர்கல்விக்கான திட்டங்கள், அரசு கலை அறிவியல் கல்லூரிகள் போன்ற திட்டங்களை தந்தவர் இவ்வாறு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேசினார்.

நிகழ்ச்சிகளில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இராம். இளங்கோவன் ஜி.என்.ரவி. மாவட்டக் கழக துணை செயலாளர்கள் மு.ஞானவேலன். எஸ். செல்வமணி அலெக்சாண் ஒன்றிய கழக செய்லாளர் பி.எம்.அன்பழகன்


ஏ. ஜி.ஜே. பிரபாகர் ,பஞ்சுகுமார், மலர்விழிநிருமாலாவன், செல்லசேதுரவிக்குமார், எம். அப்துல்மாலிக், ஞான, இயைநாதன், ஏ.ஆர். ராஜா, சீர்காழி நகரக் கழக செயலாளர் ம. சுப்பராயன் முன்னாள் ஒன்றிய குழு மேலையூர் முத்து தேவேந்திரன், பொதுக்கு உறுப்பினர்கள் வைத்தீஸ்வரன்கோயில் எஸ்.சுவாமிநாதன், ஹர்ஷத், தத்தம் ஏ.வின்சென்ட் சுப நெடுஞ்செழியன், எஸ். காந்தி, பேரூர் செயலாளர்கள் எம். அன்பு செழியன், முத்துராஜா,

ஒன்றிய குழு முன்னால் தலைவர்கள் தியாக.விஜஸ்வரன், ஜெய பிரகாஷ் க.சுரேஷ், மாவட்ட சார்பு அமைப்பாளர்கள் முத்துக்குபேரன். முருகன், தன்ராஜ், மாவட்ட அரசு வழக்கறிஞர் அருள்தாஸ், செம்பனார்கோவில் வடக்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் மற்றும் ஒன்றிய, கிளைக் கழக நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் உள்ளாட்சி அமைப்புகளின் முன்னாள் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கடையநல்லூர் கு.இராஜாமணி

### ஜூன் 21 (2009)



**தனது இளம் வயதிலேயே திராவிடர் கழகத்தில் ஈடுபாடு கொண்டு 1946ல் மதுரையில் நடைபெற்ற ‘கறுப்புச் சட்டை மாநாட்டில்’ பங்கேற்றவர். அதன்பின்னர் கழகத்தில் ஈடுபாடு கொண்டு கடையநல்லூர் நகர மாணவர் அணி அமைப்பாளராகவும், பின்னர் கடையநல்லூர் நகரக் கழகச் செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**நீதிகேட்டு நெடிய பயணத்தில் கலந்து கொண்டதுடன், கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**“கடையநல்லூர் ராஜாமணி இன்று நேற்றல்ல, பல ஆண்டுகாலமாக கழக அரசின் சாதனைகளை சொந்த முயற்சியினால் துண்டு பிரசுரமாக அச்சடித்து மக்களிடம் வழங்கி பிரச்சாரம் செய்தவர்” என்று தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பெற்றவர்.**

### தலைமைக் கழகம்

### தி.மு.க.